# 4.3 கூர்மையாகச் செவிமடுத்தல்

**இலக்கு**

*இந்தப்பயிற்சி மாணவர்களின் செயற்றிறனான கேட்டலை மேலும் வலுப்படுத்துகின்றது. இது தொடர்பாடல் மற்றும் பல்பண்பாட்டு ஆற்றலைச் செயற்படுத்தும் ஓர் இன்றியமையாத பகுதியாகும். பாவனை செய்துகாட்டும் ஒரு பயிற்சி முறையினூடாக மாணவர்களின் பல்பாட்டுத் தொடர்பாடலில் கேட்பவர் என்னும் ஆர்வத்தையும், தங்கள் பங்கையும் அறியத்தூண்டுகிறது.*

வகுப்பு 4 - 9 | 40 மணித்துளிகள்

**கருவிகள்:**
"என்னால் நன்றாக செவிமடுக்க முடியுமா..." பணித்தாள் பிரதிகள் (அடுத்த பக்கத்தில் முதன்மை நகல்)

**நடைமுறை:**

- "தொடர்பாடல் என்றால் என்ன?" என மாணவர்களிடம் கேட்கப்படும், மற்றும் தொடர்பாடல் சூழ்நிலைக்கான எடுத்துக்காட்டுக்கள் ஒருங்கு சேர்க்கப்படும். ஆசிரியர் பலகையில் இயல்பான படம் ஒன்றை வரைந்து விளங்கப்படுத்துவார். (அனுப்புபவர் ⇆ பெறுபவர்): "தொடர்பாடல் என்பது இருவருக்கிடையே நடைபெறும் பந்து (ping-pong) விளையாட்டு போன்றது. இருவர் ஒருவரையொருவர் நன்றாக விளங்கிக்கொள்ள வேண்டுமானால், முடிந்தளவு இடையூறுகள் இல்லாமல் உரையாடவேண்டும். மேலும் அனுப்புபவர் தமது தகவலை தெட்டத்தெளிவாக கூறவேண்டும். அதிகமாகத் தகவலை அனுப்பும்பொழுது சொற்களால் மட்டுமல்லாமல் சொல்லல்லாத குறியீடுகளாலும் சேர்த்து அனுப்பப்படும். எடுத்துக்காட்டாக புன்னகை, முகச்சுழிப்பு அல்லது சைகைகள். ஒரு வெற்றிகரமான தொடர்பாடல் என்பது செய்தி பெறுபவர்கள் செய்தியைப் பிழையாக விளங்காமலிருக்க கூர்மையாக செவிமடுக்க வேண்டும் எனக்குறித்துரைக்கின்றது."

- தொடர்ந்து கலந்துரையாடலில் மாணவர் செவிமடுப்பவர் செயற்றிறனுடன் கேட்கும் செய்திகளில் எவ்வளவு திறமாக ஆர்வம் காட்டுகிறார் எனும் கருத்துக்களை ஒன்றிணைத்துக் கொள்வர். பணித்தாள்கள் வகுப்பில் பகிரப்படும். மதியுரைகளும் கலந்துரையாடப்பட்டு முடியுமாயின் பதிலீடு செய்யப்படும்.

- மாணவர்கள் செயற்றிறன் கேட்டலுக்குப் பயிற்சி செய்ய மூன்று பேர் கொண்ட குழுக்களாக அமைவர். முதலாவது சுற்றில், குழு 1 இன் மாணவர் அனுப்புபவர் ஆகவும் குழு 2 இன் மாணவர் பெறுபவராகவும் செயற்றிறனுடைக் கேட்பவராகவும் அமைவர். குழு 3 இன் மாணவர் பணி என்பது 2ஆவது மாணவன் ∴ மாணவியின் செயற்றிறனுடைக் கேட்டலைக் கண்காணித்துத் தான் அறிந்தவற்றைத் தன் குழுவுக்கு வழங்குவதாகும். மூன்று சுற்றுக்கள் இடம்பெறும். அதனால் ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் ஒவ்வொரு தடவை பெற்றுக்கொள்ளமுடியும். ஆசிரியர் அனுப்புபவருக்குக் கருப்பொருள்களைப் பரிந்துரைப்பார். அவையாவன, "எனக்கு உதவி தேவைப்பட்டபோது", "எதை நான் திறம்படச் செய்யலாம்", "நான் திறம்படத் தீர்வு காண விரும்பும் ஒரு சிக்கல்". அனுப்புபவர்கள் ஒரு தலைப்பைத் தெரிவு செய்து பேசும்போது இடைவெளிவிட்டு பேசவேண்டும் என்பதை மனதில் கொள்ளவேண்டும். அது பெறுபவர் பதிலளிக்க துணைசெய்யும் என்பதற்காக. ஆசிரியர் தொடக்கத்திற்கான சைகையைக் காட்டுவர். 3 மணித்துளிகளின் பின் சுற்றை நிறைவுக்குக் கொண்டு வருவர். கண்காணிப்போர் தமது அறிக்கையை முடிப்பதற்கு 1 மணித்துளி பெறுவர். பின்னர் அவர்கள் கதாபத்திரம் மாற்றப்படும். ஈற்றில் மாணவர் தமது பணித்தாள்களை தனித்தனியாக நிறைவு செய்வர்.

- வகுப்பு முழுவதுமான கலந்துரையாடலும் தம் கருத்துப் பதிவு செய்தலும். ஒரு கேட்டல் திறனாளராக என்ன உணர்வு பெற்றீர்? பார்வையாளருக்கு இது ஒரு கேட்டல் திறனாளராக ஒருவர் உம்மைக் கூர்ந்து செவிமடுத்தபோது எப்படி இருந்திருக்கும்? நீரே ஒரு அனுப்புவராக இருந்தபோது ஒருவர் உமக்கு கண்காணிப்புடன் கேட்டபோது என்ன உணர்வு பெற்றீர்? நீர் ஒரு செயற்பாட்டினைக் கூர்ந்து செவிமடுத்தபோது எது மிகவும் எளிதாக இருந்தது, எது மிகுந்த கடினமாக இருந்தது? கண்காணிப்பாளரிடமிருந்து நீர் எதனைக் கற்றுக்கொண்டீர்? மிகக் கவனத்துடன் கேட்பது ஏன் இன்றியமையாததாகின்றது? நீர் நன்றாகக் கேட்ட ஒரு சூழலை நினைவில் கொள்ளவும்! உமது செயற்பாட்டுக் கேட்டலை அடிப்படையாகக் கொண்டு ஒரு நல்ல பின்னூட்டலைப் பெற்றதால் உம்மைப் பற்றிப் பெருமைகொண்ட ஒரு எடுத்துக்காட்டைப் பகிரவும்!

4


ப.தா.

# என்னால் நன்றாக செவிமடுக்க முடியுமா?

மாணவர்களுக்கான பணித்தாள்

---

**நல்ல கேட்டல் திறனாளராக …**



- … நீர் பேசுபவரைப் பார்க்கிறீரா?
- … நீர் அவருடைய கண்களைப் பார்க்கிறீரா?
- … நீர் தளர்வாக / அமைதியாக ஆனால் கவனத்துடன் இருக்கிறீரா?
- … நீர் கவனத்துடன் கேட்டு பேசுவோர் சொல்லவரும் விடயத்தை சிந்திக்கிறீரா?
- … நீர் குறுக்கிட்டு கதைக்காமலும் வேறு இடையூறான விடயங்களைச் செய்யாமலும் இருக்கிறீரா?
- … இடைவெளிகளின்போது மட்டும் நீர் பதிலளிக்கிறீரா?
- … பேசுபவர் என்ன உணர்கிறாரோ அப்படியே நீரும் உணர முயற்சிக்கிறீரா?
- … பேசுபவருக்கு நீர் செவிமடுக்கிறீர் என்பதை தெரியப்படுத்த தலையை ஆட்டுகிறீரா? "ம்ம்" என்று பதில் சொல்கிறீரா? அல்லது உரையாடலை சுருக்கிச்சொல்கிறீரா?

---

**கேட்கும்போது எதை நீர் நன்றாகச் செய்கிறீர்?**

---

**கேட்கும்போது எது உம்முடைய வலிமை இல்லாதது?**

---

**நன்றாகக் கேட்பதற்கு நீர் என்ன செய்ய வேண்டும்?**